# படலவட்டவணை.


| எண். | படலம். | பக்கம். |
| --- | --- | --- |
| ௧. | பாயிரம் ... | ௧. |
| ௨. | நாட்டுப்படலம் ... | ௮. |
| ௩. | நகரப்படலம் ... | ௨௧. |
| ௪. | நைமிசப்படலம் ... | ௩௪. |
| ௫. | அகத்தியர் ஞானோபதேசப்படலம் ... | ௩௯. |
| ௬. | காளிதிருவவதாரப்படலம் ... | ௪௩. |
| ௭. | காளிபட்டாபிடேகப்படலம் ... | ௪௯. |
| ௮. | சண்டாசுரன்வதைப்படலம் ... | ௫௬. |
| ௯. | காளிபூசனைப்படலம் ... | ௭௫. |
| ௰. | சுவர்னவல்லி திருமணப்படலம் ... | ௭௯. |
| ௰௧. | தேவர்கள் பூசித்தபடலம் ... | ௮௫. |
| ௰௨. | தேவதாசப்படலம் ... | ௮௯. |
| ௰௩. | இலக்குமி சாபந்தீர்ந்தபடலம் ... | ௯௩. |
| ௰௪. | உருத்திரசாபந்தீர்ந்தபடலம் ... | ௯௭. |
| ௰௫. | வீரசேனபாண்டியப்படலம் ... | ௱௩. |
| ௰௬. | வரகுணபாண்டியப்படலம் ... | ௱௯. |
| ௰௭. | சுகந்தகேசிப்படலம் ... | ௱௧௪. |
| ௰௮. | விக்கிரமசோழன் சிவலிங்கப்பிரதிட்டைப்படலம் ... | ௱௨௰. |
| ௰௯. | புட்கரப்படலம் ... | ௱௨௩. |
| ௨௰. | பேய்கள் சாபநீங்கியபடலம் ... | ௱௨௮. |
| ௨௧. | கங்கைபாபந்தீர்ந்தபடலம் ... | ௱௩௧. |
| ௨௨. | கவுதமப்படலம் ... | ௱௩௩. |
| ௨௩. | வெள்ளையானை சாபந்தீர்ந்தபடலம் ... | ௱௩௬. |
| ௨௪. | இந்திரன் சாபநீங்குபடலம் ... | ௱௩௯. |
| ௨௫. | கண்ணுவப்படலம் ... | ௱௪௩. |
| ௨௬. | தேவசேனப்படலம் ... | ௱௪௫. |
| ௨௭. | மகாகாளேசப்படலம் ... | ௱௪௭. |
| ௨௮. | சோமநாதப்படலம் ... | ௱௪௯. |
| ௨௯. | சுந்தரமூர்த்திப்படலம் ... | ௱௫௧. |
| ௩௰. | தேவராதப்படலம் ... | ௱௫௪. |
| ௩௧. | கதாசங்கிரகப்படலம் ... | ௱௫௭. |
| ௩௨. | தலவிசேடப்படலம் ... | ௱௫௯. |
| ௩௩. | முனிவர்பூசித்தபடலம் ... | ௱௬௧. |

ஆயர்விடைதழீஇயடக்கி யம்மடவார்மார்பகத்துத்
தோயவெழுயானைகளைத் தோண்மலைக்குள்ளடக்குவரந்
நாயகர்வாயெழுகுழலி னுதவொலியினையந்த
வாயகலார்ததிகளையு மார்ப்பினுக்குள்ளடக்குவரால். (௪௨)

பெரும்பசுவின்பான்மணமும் பெய்துருக்குநெய்மணமு
மரும்புதளவின்மணமு மாய்ச்சியர்மெய்யியன்மணமும்
விரும்பிநனிகுமிழ்மரமும் வீநாசிபலபெற்று
விரும்புவியிலிவைமோக்கா ரெவரவரின்மூக்காரே. (௪௩)

பசுக்களைத்தன்னுதரத்தின் பாற்காட்டித்தமையென்று
நசிப்படையாப்பாலனஞ்செய் நன்மாயனிற்சிறந்தே
பசுக்களெலாந்தம்முறுப்பிற் பசுபதிமுற்றேவர்களை
வசிப்பியலாற்காட்டியுயிர் வளர்க்கும்வனவனப்பெளிதோ. (௪௪)

வேப்புடையார்குலத்துமுன்னோர் மீனவன்வேட்டம்புரிந்து
நாப்புடையார்நீருலர்ந்து ஞாலமிசைச்சோர்ந்துவிழக்
காப்புடையாவவன்விரதங் காப்பான்காட்சிக்கரனு
ராப்புடையாராந்தலமுன் னும்பலவாங்குரைப்பதெவன். (௪௫)

மருதம்.

வேறு.

அந்தரத்தர சாட்சியுண் டெனினும்பல்லவுணர்
வந்துவந்திடை யூறுசெய் வறுமையைமறுப்பான்
மைந்துமிக்குயர் மன்னர்தம் படைத்துணைவேண்டி
யிந்திரன்புரந் தாளுவ தெழில்வளமருதம். (௪௬)

அங்கண்வானதி மேலதென் றிடிலவணதனீர்
தங்குமேரிசெய் யெத்தனை விளை*சொலெத்தனையென்
றிங்கணெண்ணுகான் முயன்மருப் பெனவதையிழித்துப்
பொங்கியார்ப்பொடு வந்தது பொருநைமாநீத்தம். (௪௭)

மலையமேயசெம் மணிக்குவைகளைவிழைஇக் காண்பான்
செலவினீரினே ரேறுவசெல்லுவ சிலமீன்
குலவுவேலையுள் வெண்மணிக்குவைகளை நோக்கச்
செலவினீரொழுக் கின்வழிச்செல்லுவ சிலமீன் (௪௮)

*சொல்-நெல்.

என்றெதிர் துதித்துப்பல்கா லிறைஞ்சிமுத் தமிழ்முனிக்கோன்
றுன்றிய வன்பினிற்பச் சோதிமண்டலத்து நாப்ப
ணின்றிருஞ் சடையிற்கங்கை நிலாமதி விளங்கமுக்கண்
மன்றி[illegible]கமேனி வாய்ந்துமை யிடத்திலங்க. (௧௬)

கருதினர் கற்பமென்னுங் கருணைமா கடலாமெம்மான்
பிரமத கணங்கள்பல்லல் பின்முற்சூழ் தரவெள்ளேற்றின்
மருவின னாகித்தோன்றி வந்துமா முனியைநோக்கித்
திருமுக மலர்ந்தோர்வாய்மை செய்யவாய் மலருமாதோ. (௧௭)

மலயமா முனிவநீசெய் மாதவ யோகுமுற்று
நிலவயா மகிழ்ந்துகொண்டா நிற்குவேண் டுவவேண்டென்னக்
கலயனின் றெழுந்ததூயோன் காயமெய்ம் மயிர்ச்சிலிர்ப்புற்
றலகிலாக் கருணைவாரி யடிகளே சரணமென்னா. (௧௮)

நினதிரு வருளினாலே நின்சுவ ரூபந்தன்னை
நின்றிருப் பூசையாற்றை நீர்மையி னுணரவேட்டே
னன்றிவை தெரியும்வண்ண நவின்றரு ளென்றான்யோகி
நன்றிது நன்றென்றேபுன் னகைகொளூஉ வருளும்பெம்மான். (௧௯)

இன்னவா றெனவெந்தன்மை யாவர்க்கு முணரவொண்ணா
தன்னதை நின்பால்வைத்த வருளினா லுரைத்துங்கேண்மோ
மன்னிய மண்ணீர்தீகால் வான்மதி யிரவியெச்ச
னென்னுமோ ரெட்டுமெம்மெய் யெனையலா தொன்றுமின்றே. (௨௰)

அனைத்துமே யெம்மிடத்தி லடங்கியுள் ளனவெண்ணில்லா
வனைத்தினும் யாமேநண்ணி யநுப்பிர வேசமாகி
யனைத்தினுஞ் சிறியதாய வணுவினு மணுமகத்தா
மனைத்தினு மகத்தாயென்று மண்ணியே திகழுகின்றேம். (௨௧)

சச்சிதா நந்தமாகித் தனித்தநிற் குணமதாகி
யிச்சையென் பனயாவற்று மின்றியே நின்றவெம்மை
நச்சிநால் வேதமின்னு நாடியுற் றறிந்தவில்லை
யச்சன காதியர்க்கு மரியதே யுணருந்தன்மை. (௨௨)

இப்பொழு தெங்கும்வியாபித் தெழுந்துன்னா னோக்கப்பட்ட
திப்பியச் சோதியேயெந் திரிபிலா வடிவமஃகு
மிப்பெரு மறையெவர்க்கு மெய்தரி ததுவாய்நீயெஞ்
செப்பமாங் கருணைதன்னாற் றிகழுக வென்றுபின்னும். (௨௩)

தண்டமொடு சூலமிவ டன்னுருவி லேறு
மண்டுபடை சூழமர் வளைப்பதினி லீனொன்
றண்டமிசைச் சூறையுரு வாகியழ லார
மொண்டுகொடு காளியை முழக்கமொடு சூழ்ந்தான். (எ௩)

சுற்றியுடன் முற்றுகனற் சூறைபொரு ளாகிப்
பற்றுமுள மன்பொடு பராவுமவர்க் கென்று
முற்றருள் பரம்பொருளை யுன்னியுமை மானிவ்
வற்றமருள் கென்றறு மனைத்துலகுங் காப்போன். (எ௪)

விண்ணிலச ரீரிமொழி மேவிநிறை நீரா
னண்ணிய தடாகமிது நாடென வுரைத்தங்
கெண்ணரிய சூறையி னெடுத்தமரி தன்னை
யண்ணிய வழுத்தினன வோடையினு ளன்றே. (எ௫)

ஓடையினுண் மூழ்கலு முருபபம தொழிந்து
பீடுபெறு காளியருள் பேசரிய பெம்மான்
தாடொழுது நிச்சலுமச் சண்டன்வருத் தாத
நீடிய சடந்தருக நின்மலவென் றேற்றாள். (எ௬)

காதமர் வளைக்குழையன் காளிதனை நோக்கி
பூதவடி வந்தனை யெடுத்தியெனப் போற
ளுதனருள் வண்ணமுரு நண்ணியெம தம்மை
சோதிவன மேற்றிசையிற் சூழ்ந்துதவஞ் செய்தாள். (எஎ)

சொல்லருமருபமொடு தோன்றுதவத் தாளை
நல்லரிய நாயகியெ னப்புகல்வ ரத்தென்
னெல்லையினைத் தாளவன மென்பரவள் மூழ்கு
பல்லவள முற்றகுளம் பாற்குளமென் பாரால். (எ௮)

பூதவுருப் பெற்றவிடம் பூதபுர மென்பார்
காதுதிறற் சண்டனுங் கனிட்டரொடு சூழ்ந்து
மோதுபல தீக்கணையின் மூடுபு முடுக்க
மேதகுநங் காளியுடன் மேவரிதின் மீண்ட. (எ௯)

அக்கணைகண் மீண்டமையி னுங்குவிறற் காளி
யுக்குமடிக் தாளெனவுணர்ந்தவுணர் யாரும்
புக்கனர்த மெல்லையினிற் போர்த்தொழில் விடுத்தார்
தக்கதிறற் காளியுநற் றவம்புரித லுற்றாள். (அ௦)

மரகதப் பலகையெங்கும் வயங்கிடப் பரப்பிச்செம்மை
பிரவிய துகிரினுப விமானங்கள் பலவுமேற்றி
விரிகதி ருதயமென்ன விளங்கொளி மணித்தசுமபு
நிரைஊற வமைத்துப் பொன்னி னிலவுசா ளரங்கள்வைத்து. (ய)

இன்னபல் வளங்களோடு மண்டப முருற்றிப்பின்னு
மன்னுபொன் னரியின்மாலை மாணிக்க மாலைவேய்ந்து
பொன்னியற் கமுகுவாழை பூரண கும்பமாதி
துன்னிய வலங்கரித்தான் சூழ்ந்தன ரமரர்யாரும். (யக)

அவருவ ரிருக்கைபுக்கங் கமர்ந்தன ரயனுமாலுஞ்
சிவபரஞ் சுடர்முற்சென்று சென்னியின் வணங்கிப்போற்றித்
தவமின்மஞ் சனச்சாலைக்குட் டலைவபோந் தருள்கவென்ன
நவமலர் முகமலர்ந்து நன்கெழுந் தருளினுல். (யஉ)

ஐயனை மணிப்பீடத்தி லமருற விருத்திவேதன்
செய்யபொற் றசும்பிற்கௌரி தீர்த்தத்தா லாட்டமாயன்
மெய்யினை யீரம்போக்கி விரிமணிப் பொன்பட்டாடை
கையுற வணிந்துநல்ல கண்மணி நீறுசாத்தி. (யங)

அணிமணிக் கலன்கள்பூட்டி யருவரை நறுஞ்செஞ்சாந்தந்
தணிதரச் சாத்திமென்பூந் தார்புனைந் தலங்கரித்துத்
துணிதர வன்றுகாணுத் துணைமலர்க் கழல்கடீண்டிப்
பணிவுறீஇப் பணிசீர்கொண்டு விளக்கினன் பரிவினின்றே. (யச)

மாலய னிருபானிற்க வானவர் கோமான்முன்னோர்
சீலமா முனிவராணேர் திகழுவெப் புடையுஞ்சூழ
மேலவர் மறைவாயோத வியந்துமங் கலங்களெங்கு
மேலவார் குழலார்பாட வெம்பிரா னிருந்தானிப்பால். (யரு)

அன்னையா யுலகமெல்லா மளித்தருள் சுவணவல்லி
தன்னைமென் கமலமின்னார் தாள்பணிந் தன்பினேடு
மன்னுமங் களநீராட்டி மணிவிளிம் புறுபொன்னுடை
துன்னிய புனைந்துபல்ல தூய்மணிக் கலன்பெய்வாரால். (யசு)

புலம்புகான் மறையும்போற்றும் பொன்னடிக் கமலங்கட்குச்
சிலம்புறு பாதசாலங் கிண்கிணி தண்டைசேர்த்துப்
பொலம்புரி பூம்பட்டாடை புனைந்தநுண் ணிடையிலங்க
வலம்புறு மேழுகோவை யணிக்கல னமையப்பூட்டி. (யள)

11

ஆதலாலிவு ணார்யமதாரநலயம புரிகென்
றோதமன்னவ னன்வயெலா மூள்ளூற நன்கு
காதிற்கேட்டலுங் களிப்பெனுங்கடலிடை மூழ்கி
மேதகும்பல சிற்பநூற்புலவரால் விரைவில். (௩௨)

கோடிசூரிய ருதித்தெனவிமானங்கள் குலவு
பீடலர்மணி மண்டபம்பற்பல பெரிதீ
நாடுமாயிரக் காலுளமண்டப் நாக
மூடுலாம்பல கோபுரஞ்செம்பொனா லுளுற்றி. (௩௩)

சுற்றும்மதி லகழ்கிடங்கதன்புறந் துடவை
மற்றுநூன்முறை வழாதுறுதிருப்பணி யாவுந்
துற்றப்பன்மணிக் குவைகளாற்பசும்பொனாற் சூழ்ந்து
முற்றுறும்படி யாலயங்குறைவற முடித்து. (௩௪)

அடர்வனத்தினை யோசனைதூரமட் டழித்துப்
படருறும்வீதிகள் பற்பலகுலத்தவர் தெருக்கள்
கடைகளுங்கழ கங்களோடன்னசத் திரங்க
ளடையநன்னக ராக்கினனண்டரும் வியப்ப. (௩௫)

ஆதிசைவர்க ளாகமபண்டித ரரிய
வேதவித்தகர் தங்களைமிகவர வழைப்பித்
தோதுமங்கவர்க் குரியனபொருண்முத லுதவிப்
போதுநித்தியபூசனைவழாதுறப் புரிந்தான். (௩௬)

இன்னுமெங்கள்நா ளீசனேடரியசோ மேசன்
சொன்னவல்லிநற் சுந்தராம்பிகையிவர் தமக்கு
மன்னுமாவிடை மதியின்விசாகநா ளதிலுந்
துன்னுதைமதிப் பூசநாடன்னிலும் தொடங்கி. (௩௭)

திருவிழாக்களை யியற்றிப்பின்னும்பல சிறப்பு
மொருவிலாதவ ணிகழ்தரப்புரிந்தன னுவந்து
பரிவொடுஞ்சிவ பத்திமேற்கொண்டனன் றிண்டோண்
மருவுதாரணி வீரசேனப்பெயர் மாறன். (௩௮)

தங்குசோமசுந் தரனையுங்கயற்கணி தனையு
மங்குநாடொறும் போய்த்தொழுதிரதமுற் றவன்போய்
மங்குன்மாரியி னனைந்துமெய்வருந்தியோர் பொழுதி
லெங்களையக போற்றியென்றடியில்வீழ்ந் தொழந்தான்

என்றுபோற்றின னங்குறைமறையவர் யாரு
நின்றுகேட்டுள மகிழ்தரநவில்கவு தமன்று
னன்றுபூரணை மார்கழித்திங்களா தலினாற்
றுன்றமுழ்கினன் றாயகாளீசனைத் துதித்தான். (உச)

பின்னரத்தடங் கரையமர்பேய்களின் மீது
மென்றுபுண்ணிய நீரினைவாரியங் கிறைத்தா
னன்னபேய்களவ் வுருவகன்றமர்விமா னத்தின்
மின்னெனப்பொலிந் தரிபுவான்கயிலையே வியவால். (உரு)

தருந்தவத்தினர் சாற்றுபன்மறையவர் யாரும்
புகழ்ந்துபோற்றினர் புண்ணியதீர்த்தமா மிதற்குச்
சகந்தனிநிற்றிணை யில்லையென்றார்த்தனர் தாழ்ந்து
மிருந்தவன்பொடு மெங்கள்காளீசனை வியந்தார். (உசா)

பேய்நன் சாபநீங்கியபடல முற்றிற்று.
ஆ செய்யுள் கருக.

# கங்கைபாபந்தீர்ந்தபடலம்.

திங்கண்மோலிதன் றீர்த்தத்தைம் பேய்களின்
பொங்குசாபம் புலர்ந்தமை சொற்றன
முங்கிமுழ்கினர் முற்பவம் பாற்றிடுங்
கங்கைபாவங் கரைந்ததுங் கூறுவாம். (க)

வேறு.

ஏததுமாவயி ராவதக், கேத்திரத்துள மறையவர்
தூத்தனிச்சிவ கங்கைநற், றீர்த்தமுற்றுட னுடினர். (உ)

இருந்தகௌதமர் முன்புவந், தருந்தவாவென வேத்தியே
திருந்துசேவடி தாழ்ந்தனர், பொருந்துமாறிவை புகலுவார். (ங)

நேரினின்றபல் பேய்கண்மே, னீரைவாரி யிறைத்துவழு
னாருறும்படி செய்தனை, காரின்மின்னின் விளங்கினார். (ச)

ஏவரின்னவ ரெந்தவூர், தாவருந்துயர் வந்ததென்
மேவரும்படி கூறெனு, வோவருந்தவ னுரைசெய்வான். (ரு)

துய்யநீர்நின்ற சேதுவிற், றையிலென்மதி தழுவுநா
ளுய்யுமாறவ னுடுவோன், செய்யதாரியி னெய்தினேன். (சா)

பாதகம்பல செய்தனன்பாவியேன்
வேதமெய்ந்நெறி விட்டனன்பொய்மிகு
தீதுளார்தமைச் சேர்ந்தனனென்றென்று
வேதனைப்பட ருற்றுவெதும்பியே. (அ)

சிறுவன்பாலுறீஇத் தீர்வதின்றிப்பிணி
யிறுதியுற்ற தின்பிழையேனெனைச்
செறியுந்தீய நரகிடைச்சேர்க்கினு
முறுதியோர்கழு வாய்செயவுன்னினேன். (கூ)

மன்னுசேதுவிற் சென்றுமனத்தினி
லென்னையுன்னிக் குடைந்திவணெய்தெனச்
சென்னிதாழ்ந்துடன் சென்றனன்மைந்தனு
முன்னுநாடு நகருமொரீஇனான். (ய)

வளருஞ்சோதி வனத்தினிலுற்றனன்
கிளருமேன்மையுங் கீர்த்தியுங்கேட்டன
னளவில்மான்மியத் தானமடுவினைக்
களவில்சிந்தையன் கண்டனனாயிடை. (யக)

விடியுங்காலை விரும்பிவிதிப்படி
குடைகுவோமெனக் கூடிக்குளிர்ந்ததோர்
படியினன்று படுத்துத்துயின்றன
னடையிளைத்து நலிதருபண்பினான். (யஉ)

அந்தவேலை யயர்ந்தகனவினிற்
றநதைவந்தனன் றன்பிணியாவும்போய்
முந்தைநல்லுருப் பெற்றுமுதிர்ந்தெழிற்
சந்தமாடை தரித்தெதிர்நின்றனன். (யங)

ஐயநின்பிணி யாவுமொழிந்தவா
வெய்யுமெவ்வுழி யின்றிவணெய்தினை
உமயினற்றவ வென்றுவணங்கவுஞ்
செய்யசீலகே ளென்றிவைசெப்புவான். (யச)

நீயகன்றபி னேர்ந்தனர்காலர்க
டேயதண்டனை யாவையுஞ்செய்தெனை
மேயகும்பியில் வீழ்த்திடப்போம்பொழு
தாயவென்முன மந்தகன்வந்தனன். (யரு)

ஈசன்பே ரொளியாய்த்தோன்றி யெவைக்குமா தாரமாயே
பூசனை விதிகேளென்று புகன்றனன் பின்னரம்மை
காசக லரன்கண்பொத்திக் காளியா யுற்றசாப
மாசகல் கானப்பேரில் வந்துதீர்ந் தின்பமுற்றாள். (௬)

பண்டய னரியரன்றும் படைத்துக்காத் தழிப்பகந்தை,
கொண்டதா லகன்றுதால் சூக்குமக் குறியைநோக்கி.
மண்டுகா னப்பேரூரில் வந்துதத் தனிமுத்தீர்த்தங்
கண்டுபூ சித்துமீட்டுங் கழறுமுத் தொழில்பெற்றால். (எ)

இந்திர னவையரம்பை யேதின்றி நகைப்பவன்றேன்
முந்திடு சாபத்தாலே முதுமணை லூரிற்றோன்றி
வந்துதா சியெனச்சோதி வனத்திற்றைப் பூசத்தானே
தந்திடு மடுவின்மூழ்கிச் சாபநீத் தவ்வானுற்றாள். (அ)

முந்துநாள் கைலைவெற்பின் முன்னவன் றிருவோலக்கத்
துந்திய வன்னலூர்தி யூர்வசி கலைகாணீக்க
வந்திலா ருவைக்கண்டாசை யடைதலு மீசன்சாபம்
வந்தது கானப்பேரில் வந்துதீர்ந் தணிந்தான்கோயில். (௯)

மரைமலர் மீதுவாழ்வாள் வாலக்கில் லியரைநிந்தை
யுரைதர வன்னார்சாப முரைத்திடக் கானப்பேரிற்
புரையற நோற்றப்பாவம் போக்கியோர் தீர்த்தங்கண்டு
விரைவிற்கா ளீசன்பூசை மேவித்தன் *றவனைச்சார்ந்தாள். (௰)

முன்னர்நைத் திருவனென்னு முனிமகட் கண்டுவாயு
துன்னியிச் சிக்கவன்று டனியுறீஇத் தந்தைக்கோதி
வன்னவ னிற்றொடிற்†கஞ் சதபின்ன மாகவென்றான்
பின்னரக் ‡காலுமப்பெண் பேயாக விட்டான்சாவம். (௰௧)

அன்னவா றுயபெண்ணே டம்முனி காத்தியாயன்
றன்னதாச் சிரமநண்ணித் தமிழ்முனி வரக்கண்டோத
மன்னிநீர் கானப்பேர்க்கு மாசிப்பூ ரணையில்வம்மின்
றுன்னுவல் கங்கைலாடியானுந் துயர்போமென் றுரைத்துப்போனான். ()

உற்றநைத் திருவனப்பெண் ணேடுகா னப்பேரண்மி
முற்றுசீர்ப் புனிததீர்த்த மூழ்கியப் புன்றெறிப்பப்
பெற்றுடன் முயன்மெய்யோனி மேயினள் பண்டைமேனி
கற்றுணர் கும்பயோனி காலினே டாங்குச்சார்ந்தான். (௰௩)

* தவன் - நாயகன். † கம் - தலை. ‡ கால் - வாயுதேவன்.

இன்னணம் புகழ்ந்துகாளி புநத்தினி லிறங்கினார்தொக்
கன்னதன் மகிமைபோற்பல் வளங்களு மளக்கவொண்ணாத்
துன்னிய கயிலையென்னத் துலங்குதல் கண்டுசூழ்ந்து
மின்னுபுண் ணியதீர்த்தத்து விதிப்படி குடைந்தார்மன்னோ. (௪)

கண்டிகை புனைந்துபூதி கவின்பெறப் பூசியங்கட்
பண்டுவாண் மேனடந்த பத்திரை தனைப்பணிந்தங்
கண்டர்தாழ் காளீசன்முன் னாயினோர் தமையுந்தாழ்ந்து
மண்டபங் களினின்றேத்து மறையவர் தமையும்வாழ்த்தி. (௫)

ஐங்கர னந்தியாதி யவரையுந் தொழுதுசூழ்ந்து
சங்கரற் காண்டற்கேற்ற தகும்பொருள் கைக்கொண்டுசென்
றங்கெழிற் காளீசன்சோ மேசனை யபிடேகித்துத்
தங்குமா யிரநாமங்கள் சாற்றியர்ச் சித்தாரன்றே. (௬)

சன்னிதி நின்றுதாழ்ந்து தகுமறைப் பொருள்களாலே
யுன்னினர் துதித்துள்ளன்பி னுருகினர் நிற்கவாங்கு
நன்னிதி நிகர்காளீச னருமொழி வடிவிற்றோன்றி
யென்னிவண் வேண்டுமாறிங் களிக்குது மிசைமினென்ன. (௭)

பவக்கடல் கடந்தியாங்கள் பற்றற வுள்ளன்போடு
முவக்குநின் கமலப்பொற்றா ளுறுவதே வேண்டுமென்னத்
தவத்தவர் தம்மைநோக்கித் தக்கநஞ் சரிதங்கேட்டுள்
ளவத்தமி லன்பினோடிங் கடைந்துநற் றுதியுஞ்செய்தீர். (௮)

பத்தியில் லார்கண்ஞான பாகமில் லார்களேனு
நத்தியித் தலமுற்றோரே னல்குவம் யாவுமேலா
முத்தியு மென்றாற்பின்ன ருங்கட்கு மொழிவதென்னை
சத்திய மிவணடைந்தார் தம்மைவிட் டகலேமென்றான். (௯)

என்றலு முனிவர்யாரு மெங்கள்கா ளீசன்பொற்றாண்
மன்றலங் கமலந்தாழ்ந்து மனத்துளைந் தெழுத்துமெண்ணி
யன்றுதொட் டங்குவைகி யானந்தக் கடலுண்மூழ்கி
யொன்றுறு சிவபதத்தி லுற்றுவாழ்ந் திருந்தார்மன்னோ. (௰)

முனிவர்பூசித்தபடல முற்றிற்று.

ஆ செய்யுள் ௲௨௱௭.

## வாழி.

வாழியந்தணர் மாமழைவாழியே
வாழிமன்னவர் வையகம்வாழியே
வாழிசோதி வனத்திற்காளீசன்றாள்
வாழியன்பர் மலர்ப்பதம்வாழியே.

காளையார்கோயிற்புராண முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY TIRUVANMIYUR

